சென்னை மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலரின் செயல்முறைகள், சென்னை – 8

ந.க.எண் 5927 / ஈ 1 / 2018 நாள் 03.11.2018

பொருள் விடுமுறை – தீபாவளி பண்டிகையை முன்னிட்டு – தீபாவளி முந்திய தினமான 05.11.2018 திங்கட்கிழமை அன்று அனைத்து வகை பள்ளிகளுக்கு உள்ளூர் விடுமுறை அறிவிப்பது தொடர்பாக

பார்வை
1. அரசாணை எண் (1டி) எண் 336 நாள் 29.10.2018
2. சென்னை மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலக தொலைபேசி நாள் 03.11.2018

---

பார்வையில் 1–ல் காணும் அரசாணையில் தீபாவளி முந்திய தினமான 05.11.2018 திங்கட்கிழமை அன்று அனைத்து வகை பள்ளிகளுக்கு உள்ளூர் விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும் இந்த உள்ளூர் விடுமுறைக்கு ஈடாக 10.11.2018 இரண்டாம் சனிக்கிழமையினை சென்னை மாவட்டத்தில் உள்ள அனைத்து அரசு அலுவலங்கள் மற்றும் கல்வி நிறுவனங்களுக்கு பணிநாளாக அறிவிக்கப்பட்டுள்ளது. எனவே அனைத்து ஆய்வு அலுவலர்கள் மற்றும் அனைத்து வகை பள்ளித் தலைமையாசிரியர்கள் / முதல்வர்கள் முறையாக அனுசரிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

பார்வை 2–ல் காண் அலுவலக தொலைபேசியில் சில தனியார் பள்ளிகள் 05.11.2018 அன்று பள்ளி நடைபெறும் என தெரிவிப்பதாகவும் , சிறப்பு வகுப்புகளுக்கு வருகை புரியமாறு பள்ளி மாணவ, மாணவிகளை கட்டாயப்படுத்துவதாகவும், சென்னை முதன்மைக்கல்வி அலுவலக தொலைபேசி மூலம் புகார் தெரிவிக்கின்றனர். எனவே அனைத்து வகை தனியார் பள்ளிகள் 05.11.2018 பள்ளிகளுக்கு உள்ளூர் விடுமுறை அனுசரிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள் தவறும் பட்சத்தில் பள்ளி முதல்வர்கள் மற்றும் பள்ளி தாளாளர்கள் மீது தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என திட்டவட்டமாக தெரிவிக்கப்படுகிறது.

ஒம்/– திருமதி ஆர்.திருவளர் செல்வி
முதன்மைக்கல்வி அலுவலர்
சென்னை – 8

பெறுநர்

தலைமையாசிரியர்கள் / முதல்வர்கள்

அனைத்து வகை பள்ளிகள் , சென்னை மாவட்டம்

நகல்

1. அனைத்து மாவட்டக்கல்வி அலுவலர்கள், சென்னை மாவட்டம் ( தங்கள் ஆளுகையில் உள்ள பள்ளிகளுக்கு மின்னஞ்சல் மூலம் உடன் அனுப்பி வைக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்)

Scanned by CamScanner